| O.S.No. 28/2025 | PW1: திரு. ரவீந்திரன்<br>த/பெ. திரு. பச்சையப்பன் | 02-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1–ல் 24 மாதம் காலக்கெடு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 24.01.2023 அன்று ஆவணம் பதிவு செய்யப்பட்டது. ரூ.7,40,000/– முன்பணமாக பிரதிவாதி பெற்றுக்கொண்டார். 2 ஆண்டுகள் முடிந்து பிரதிவாதி சொத்தினை பதிவு செய்து தரவில்லை, அதனால் வழக்கு போட்டேன். நான் மீத தொகை ரூ.10,000/– பிரதிவாதிக்கு கொடுத்தீர்களா என்றால் இல்லை.

2. என்னிடம் காட்டப்படும் கடிதம் நான் பிரதிவாதிக்கு எழுதியதுதான். அந்த **07.11.2024 தேதியிட்ட கடிதம் பி.சா.ஆ.1** ஆகும். பி.சா.ஆ.1 கடிதத்திற்கு எனக்கும், எனது வழக்கறிஞருக்கும் பிரதிவாதி பதில் கொடுத்தார். அந்த **04.12.2024 தேதியிட்ட பதில் அறிவிப்பு பி.சா.ஆ.2** ஆகும். ஆனால், அந்த பதில் அறிவிப்பிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. பிரதிவாதியின் மகன் வெங்கடேசன் என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதியின் மகன் வெங்கடேசன்தான் வட்டி கொடுத்தார் என்றால் நான் வட்டி வாங்கவில்லை.

3. எனக்கு வெங்கடேசன் வட்டியாக மாதம் மாதம் ரூ.15,000/– G–Pay மூலமாக அனுப்பினார் என்றாலும், நான் வழக்கிற்காக தற்போது இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கும் வெங்கடேசனுக்கும் வேறு விதமான வங்கி பரிவர்த்தனை இருந்தது. இந்த வழக்கிற்கு சம்மந்தமாக எனக்கும் வெங்கடேசனுக்கும் எந்த பரிமாற்றமும் இல்லை. ஆனால், வெங்கடேசன் கடைக்கு வந்து என்னிடம் அடிக்கடி பணம் வாங்குவார், அதைத்தான் G–Pay மூலம் செலுத்தியிருந்தார். அவ்வாறு வெங்கடேசன் பணம் திரும்ப கொடுக்கும்போது நான் பாண்டு எழுதி வாங்குவது வழக்கம் என்றால் இல்லை. எதன் அடிப்படையில் பணம் கொடுத்தீர்கள் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன். எனக்கும்,

பிரதிவாதிக்கும் இந்த வழக்கு பண பரிவர்த்தனையை தவிர்த்து அதற்கு முன்பாக எந்தவொரு பணப்பரிவர்த்தனையும் இல்லை.

4. பூக்கடை வேலு என் நண்பர். நான் அவருக்கு பணம் கொடுக்கவில்லை. பூக்கடை வேலு எனக்கு நேரடியாக பழக்கம், அவர் வெங்கடேசனுக்கும் நண்பர்தான். பூக்கடை வேலு, வெங்கடேசன் ஆகியோர் கொடுக்க வேண்டிய பணத்திற்கு மொத்தமாக பிரதிவாதியிடம் பத்திரம் எழுதி வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. வெங்கடேசன் வட்டி கொடுத்த பணத்திற்கு ரசீது கேட்டதால்தான் இந்த தகராறு வந்தது என்று சொன்னால் சரியல்ல. வெங்கடேசன் கடைசியாக ரூ.60,000/- வாங்கினார். G-Pay மூலமாக 4 மாதம் வட்டி கொடுத்ததை வேறு கடனுக்காக கொடுக்கப்பட்டது என பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. நான் உண்மையில் கிரைய ஒப்பந்தத்திற்காக பணம் கொடுத்திருந்தால் மீதமுள்ள ரூ.10,000/-த்தைக் கொண்டு கிரையம் பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் மீத கிரைய தொகை ரூ.10,000/-ஐ டெபாசிட் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மீதம் ரூ.10,000/- கொடுத்து கிரையம் செய்து கொள்கிறேன் என்று பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் இல்லை, ஆனால் நேரடியாக போய் கேட்டேன். அவ்வாறு நான் நேரடியாக எதுவும் கேட்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஏறக்குறைய 18 மாதங்கள் மாதம் ரூ.15,000/- வீதம் எனக்கு வட்டி கொடுக்கப்பட்டதால்தான் நான் சொத்தினை கிரைய பதிவு செய்துகொள்ள எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. நான் பிரதிவாதியிடம் சில மாதம் G-Pay மூலமாகவும் சில மாதம் நேரடியாகவும் பணம் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரபு, முருகேசன் ஆகியோரை தெரியும். நான் சொல்லி பிரபு, முருகேசன் பெயரில் ரூ.15,000/- பணம் G-Pay மூலம் பிரதிவாதி செலுத்தினார் என்றால் சரியல்ல.

இரண்டு, மூன்று பேருக்கு கடன் கொடுத்ததற்கு அடமான கடன் பத்திரம் எழுத சொல்லியதற்கு நான் கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ள நான் எந்த காலத்திலும் தயாராக இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால், நான் கிரைய ஒப்பந்தப்படி பரிகாரம் கோர அறுகதையற்றவர் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த திரும்ப பெறுவதற்கான பரிகாரத்தைத்தான் நான் பெறமுடியும் என்றாலும், கிரையம் பதிவு செய்துகொடுக்க கோரும் பரிகாரத்தினை கோரமுடியாது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.02 15:33:04 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**